**மஹஓய பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹஓய பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கடை வாடகைப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கடை வாடகை வருமானம் ரூபா 1,591,850 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,477,850 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடை வாடகை வருமானம் ரூபா 114,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 3,439,117 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 3,434,482 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியம் ரூபா 4,635 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் காணி, கட்டிடங்களின் பெறுமதியும் மற்றும் மோட்டார் வாகனங்களினதும் வண்டிகளினதும் பெறுமதிகள் கூட்டுத்தொகை ரூபா 26,860,327 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் அப்பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,753,577 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 18,893,250 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 80,022 தொகையான நூலக அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டு மீளச் செலுத்த வேண்டிய வைப்புப் பணம் பிழையாக திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 312,550 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் அது ஐந்தொகையில் ரூபா 103,250 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ஐந்தொகையில் ரூபா 209,300 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 148,709 மற்றும் நிலுவைக் கடன் வட்டி ரூபா 922,404 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,050,494 தொகை மற்றும் ரூபா 1,010,924 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் வியாபார அனுமதிப்பத்திர வருமானம், வருமானப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 285,250 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 389,600 ஆக ரூபா 104,350 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

காணி மற்றும் கட்டிடங்களில் ரூபா 32,106,327 தொகையும், இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணம் ரூபா 1,366,506 தொகையும், மோட்டார் வாகனமும் வண்டியும் ரூபா 13,647,250 தொகையும், தளபாடமும் பொருத்திகளும் ரூபா 2,382,345 தொகை மற்றும் அலுவலக உபகரணங்களின் ரூபா 26,770 தொகையும் ஆக ரூபா 39,533,198 தொகைக்காக நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்தப் பெறுமதியை திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 757(4) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பிரதேச சபை விதிக்கோவை

--------------------------------------------

| | |
|---|---|
| விதி 153 | நிலுவை வருமானம் தொடர்பான கூற்றொன்று பீ.எஸ் 07 படிவத்தின் பிரகாரம் பிரதேச சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,103,267 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 459,225 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 1,562,492 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| ------------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,000 | | |
| வாடகை | 2,796,900 | 3,105,860 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 415,000 | 392,770 | 225,276 |
| சேவைக்கான கட்டணம் | 1,685,000 | 2,258,035 | - |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 455,000 | 1,589,918 | - |
| ஏனைய வருமானம் | 164,000 | 302,606 | 629,000 |

## 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 525,750 தொகை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும், அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை முத்திரைக் கட்டணமாக ரூபா 312,550 தொகை பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(இ) கடன்பண அறவீடு

(ஈ) பாதீடு

(உ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல்